ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# கொங்கு தேச குறுநில மன்னர்களில் மழவரும் பாலை நிலத்து வாழ்வியலும்

**ப. பவானி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத் துறை, எத்திராஜ் மகளிர் கல்லூரி-05.

**முனைவர் பெ. நிர்மலா**
துறைத் தலைவர்
தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை
எத்திராஜ் மகளிர் கல்லூரி,சென்னை-08

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியம் எனும் செவ்விலக்கியத்தில் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கருத்துகளும் வாழ்க்கை முறையும் அடங்கியுள்ளன. அரசர், குறுநில மன்னன், வேளிர்கள், வள்ளல்கள் என பல்வேறு நிலைகளில் மக்களை நல்வழியில் பலர் ஆட்சி செய்துள்ளனர். அந்த வகையில் பல குறுநில மன்னர்கள் வேளிர் மரபைச் சார்ந்தவராகவும் வள்ளலாகவும் வாழ்ந்துள்ளனர். கொங்கு நாட்டைப் பற்றி ஆய்வு செய்த புலவர் குழந்தை, எஸ்.ஆர்.சுப்ரமணியம், த.வேங்கடசாமி முதலியோர் கொங்கு தேசத்தில்தான் கடையெழு வள்ளல்களுள் பலர் வாழ்ந்தனர் என்றும் அதற்குப்பின் வந்த பல வள்ளல்களும் கொங்கு தேசத்து நிலத்திலே பிறந்தவர்கள் என்றும் கூறியுள்ளனர்.சங்க இலக்கிய குடி மரபில் இளையர், மழவர், ஆடவர், கள்வர், மறவர் ஆகியோர் இருந்தனர். அதனுள் மழவர்களை அதியமானின் குடியென்றும் ஓரியின் குடியென்றும் கூறுவர் சிலர்.ஆனால் ஒரு சில ஆய்வாளர்கள் அதனைத் தவறாகக் கருதுவர். மறவர்கள் வாழ்க்கைமுறையையும் அவர்களின் குடியினைப்பற்றியும் ஆய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** *மழவர், மறவர், ஆநிரை, அதிகன், ஓரி, பழங்குடியினர், பூந்தொடை விழா, இளையர்*

## முன்னுரை

**தொல்காப்பியத்தில்** *வரும்* **"மழவுங் குழவும் இளமைப் பொருள்"** *எனும் அடியை வைத்து மழவர்கள் என்போர் தனிக்குடியல்ல எல்லா பழங்குடியிலும் இருந்த இளம் வீரர்களைக் குறிக்கும் சொல் என்றும்; இவர்கள்* **தண்டாரணியம், குதிரை மலை, தகடூர், ஓரியின் கொல்லி மலை, திருப்பாச்சில்** *முதலிய பகுதிகளில் வாழ்ந்து வந்த சங்க கால மக்கள் இப்பெயரில் அறியப்பட்டனர் என்றும் கூறுவர். கொங்கு தேசத்தைச் சார்ந்த வள்ளல்களாகிய அதியமானையும் (புறம் 88,90)வல்வில் ஓரியையும் (நற்றிணை-52) மழவர் பெருமகன் என சங்க இலக்கிய பாடல்கள் குறிக்கின்றன. இதனை ஆய்ந்த பல ஆய்வாளர்கள் பல கருத்துகளைக் கூறியுள்ளனர்.*

**மழவர் பெருமகன்**

**"வெம்போர் மழவர் பெருமகன்**

**மாவள்ளோரி கைவளமி மைய தாயினும்**

**ஐதே கம்மவியைந்து செம்பொருளே".**

(நற்-52)

என்று வல்வில் ஓரி மழவர் பெருமகன் என்று போற்றப்படுகிறான்.

**ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்**

**கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்**

என அதியனும் ஔவையால் மழவர் பெருமகன் என்று போற்றப்படுகிறான்.

அதியமானும் வல்வில் ஓரியும் கடையெழு வல்லல்களில் ஒருவனான மலையமான் திருமுடிக் காரியுடன் போர் புரிந்த போது மழவர்கள் எனப்படும் வீரர் குழுவின் உதவியை நாடியதால் மழவர் பெருமகன் என்று அழைக்கப்படுவதாக கூறுவர்.

அதிகரில் சிலர் மழவர் குடியாக இருக்கலாம் என வேளிர் வரலாறு எழுதிய ரா.பூங்குன்றன் கூறுகிறார். அதிகரும் ஓரியும் மழவர் குடியைச் சார்ந்தவர் என சேர மழவர் வரலாறு (தொல்லியல் நோக்கில்) என்னும் நூல் எழுதிய நடன காசிநாதன் கூறுகிறார். மழவர் என்றால் சில வீரர் என நச்சினார்க்கினியர்குறிப்பிடுகிறார். மழவரைப் பற்றி சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் உள்ளன. அகம்35,121,127,129,131,187 போன்ற பல பாடல்கள் மழவரை நிரை கவர்பவர்களாகக் காட்டப்படுகின்றன. பசுக்களைப் பெரும்பாலும் கவர்பவர் களாகவே அவர்கள் உள்ளனர்.பசுவைக் கவர்ந்து அதன் உணவைச் சமைத்து உண்பவர்களாக இருந்துள்ளனர்.மழவர்கள் வழிச்செல்வோரைத் துன்புறுத்துவர்.மழவர் கூட்டத்தால் பாலை நிலத்தின் வணிகர்களின் வண்டிகள் செல்லுமளவுக்கு அவர்கள் பாதையை உண்டாக்கி உள்ளனர். (அகம்-121). மழவர்கள் வெண்கடம்ப மலர்களைச் சூடியிருப்பர். (அகம்-131). மழவர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இல்லையென வேளிர் வரலாறு எனும் நூலில் ர.பூங்குன்றன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அகம் 131ஆம் பாடலில் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் பாடலில் பொருளீட்டச் செல்லும் இடத்தின் தன்மையைக் கூறுமிடத்து, வழிப்போக்கர் களைக் கொன்று அவர்களிடம் இருந்து பறித்துச் சென்ற பசுக்களைக் கொன்று அதன் உணவை உண்ட மழவர்கள் அதன் கன்றுகள் வடிக்கும் கண்ணீரைத் துடைப்பர். அப்படி கருணையும் வீரமும் கொண்ட மழவர்களுக்கு, இறந்த பிறகு நடுகல் எடுப்பரென்றும் அவரின் பெயரும் சிறப்பும் பொறித்து அந்த நடுகல் முன் வேல் ஊன்றி கேடகத்தைப் பதித்து மயில் தோகையையும் உடன் வைத்து வழிபடுவர் என்றும் இப்படிபட்ட பல நடுகற்கள் வழிதோறும் காணப்பட்டு பாசறை போல் இருக்கும் என்று பாடலின் வாயிலாகக் கூறியுள்ளார் மதுரை மருதன்இளநாகனார்.

**வீளை அம்பின் விழுத்தொடை மழவர்**

**நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரந்து**

**நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்**

**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**

**பெயரும் பீடும் எழுதி,அதர்தொறும்**

**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்**

**வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கொடுக்கும்**

**வெருவரு தகுந கானம்**

**பூந்தொடைவிழா**

மழவர்கள் பூந்தொடை விழாவினைக் கொண்டாடினர் என்று (அகம்-187)ஆவது பாடல் தெரிவிக்கிறது. ர.பூங்குன்றன் மழவர் களைப் பழங்குடியினர் என்றும் தாழ்ந்தவர் என்றும் சங்கப்பாடல் வழி அறியலாம் எனக் கூறியுள்ளார். (பக்-47). ஆனால் மழவர் நடுகல் எடுத்தமையாலும் பூந்தொடை விழா எனும் வீரம் சார்ந்த விழாவினை மேற்கொண்டதி னாலும் மூலமும் அவர்கள் தாழ்த்தப் பட்டவர் இல்லை என அறிய முடிகிறது. மேலும் சேரர்-மழவர் வரலாறு எனும் நூலெழுதிய நடன.காசிநாதன் சேரர் மழவர்,அதியர் மழவர், கொல்லி மழவர் ஆகிய மூவரும் மழவர் சிறார்க்கு வில் வித்தைப் பயிற்றுவிப்பதற்காகத் தொடங்கும் நாளை பூந்தொடை விழாவாகக் கொண்டா டினர் எனக் கூறுகிறார். (ப-25)

**வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்**

**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**

(அகம்-187)

மேலும் பதிற்றுப்பத்து தகடூரில் இவ்விழா நடந்ததைக் கூறுகிறது.

"வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும்

வில்பயில் இறும்பின் தகடூர்"

மேற்கண்டதன் மூலம் மழவர்கள் தாழ்த்தப் பட்ட பழங்குடியினராய் வாழாமல் தங்கள் சமூகத்தின் வாழ்வியல் கோட்பாடுகளுடன் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.

### சிலம்பில் பாலை நிலம்

சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் வழியில் வந்த மாங்காட்டு மறையவனை மதுரை செல்வதற்கு நல்லவழியைக் கூறு எனக் கேட்ட கோவலனுக்கு அம்மறையவன் கூறிய செய்தியில் பாலை நிலத்தின் தன்மையைக் குறிப்பிடுவான்.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்".

(சிலம்பு-காடுகாண்)

என்பது சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற அடிகள். இப்பாடற்பகுதியில் வேனிற்காலத் தொடு வெங்கதிர் கூடித்தன்னலம் மாறுபட்ட தன்மையினால், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுயர் செய்யும் பாலை என்ற வடிவத்தைக் கொள்ளும் காலமாக உள்ளது என்று இளங்கோவடிகள் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலையாதலைக் குறித்துள்ளார். பாலையைக் குறிக்குமிடத்து நடுங்குதுயர் என குறித்தலால் பாலையின் மக்கள் வாழ்க்கைமுறையை அறிய முடிகிறது.

### அகநானூறில் பாலை நிலமும் மழவர் வாழ்வியலும்

மற்ற சங்க நூல்களைக் காட்டிலும் அகநானூறில் மழவர்கள் பற்றி பல கருத்துகள் நிரம்பியுள்ளன. பாலை நிலத்திலே அவர்கள் வாழ்க்கை முறையும் அடங்கியிரு ந்தது. ஆண்மான் புல் தின்னுவதை மறந்து, மூங்கிலிலிருந்து நெல் உதிர்வதைப் பார்த்து, தனது பெண் மானை அழைத்து அதனைக் காண்பிக்கிறது. அதற்கு அருகிலே ஒரு பாறையை ஒட்டி பழைய சிதைந்த குடிசையில், பானையில் தழைத்து வளர்ந்த பருத்திச் செடியின் இளங்காயினை, ஆண் பறவைகள், தன் பேடைகளை உண்ணச் செய்விக்கும். பின்பு பஞ்சு சூழ்ந்துள்ள அவற்றின் கொட் டையைப் பிளந்து போடும். ஏழைகளான மகளிர், அடுத்த வேளை உணவாக, அதனைச் சேர்த்து வைத்துக் காப்பர். மக்களை மனங் கலங்கச் செய்யும் போர்கள் நடக்கும் சிற்றூர் களில், அவர்கள் தலையில் கை வைத்து அலறும் படி மழவர்கள் பசுக்களைக் கொள்ளையிட்டுச் சென்று ,உணவாகக் கொண்டு தின்று,சுனையின் தெளிந்த நீரை நிறையப்பருகுவர். இவ்வாறாக அகம் 129 ம் பாடல் கூறுகிறது. மழவர்கள் ஆநிரைகளைக் கவர்பவர்கள். குறிப்பாக பசுக்களைக் கவர்ந்து அதனைத் தான் கும்பிடும் தெய்வத்திற்குப் பலியிட்டு பின் அதனை சமைத்து உண்டு வாழ்ந்ததாக பாடல்கள் குறிப்பிடுகின்றன.

நல்கூர் பெண்டிர் அல்கம் கூட்டும்

கலங்குமுனைச் சீறூர் கைதலை வைப்ப,

கொழுப்புஆ தின்ற கூர்ம்படை மழவர்,

செருப்படை அடியர், தெண்சுனை மண்டும்

எனக்குறிக்கிறது. மழவர்கள் வெண்கடம்ப மலர்களைச் சூடுவர், வில்லேந்தி வழிப்போ வாரை எதிர்நோக்கி மறைந்து இருக்கும் வழிப் பறிக்கொள்ளையர்கள் வாழ்வது பாலை நிலக்காடென்றும், எப்போதும் அச்சம் நிறைந்ததாகவும் உள்ளதாக பாலை நிலத்தன்மை சுட்டப்படுகிறது. அங்கு இருக்கும் பல பாதைகள் பின்னிப் பிணைந்து இருக்கும் என்பதை **கல்லா மழவர் வில்இடம் தழீஇ, வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை** எனும் அகம்127ஆம் அடிகள் குறிக்கின்றன. பாலை நில வழியில் கொடிய வேட்டுவர் வாழ்கின்றனர்.அவர்கள் வளைந்து சுருண்ட பரட்டைத்தலையினை உடையவரென்றும் அவர்கள் வில்லில் அம்பை, அதன் சுரை நன்கு படியுமாறு வைத்து, தம் காது வரை நாணை இழுத்து எய்தி, வழிப் பயணிகளைக் கொன்று, அவர் தம் பொருளைக் கொள்ளை கொள்வர். இறந்தோரின் அந்த உடலை ஆண்பருந்துகள் உண்டு வாழும் என அகநானூறில் குறிப்புள்ளது. பொருளைக் கொள்ளையடிக்க மக்களைக் கொன்றுள்ளனர். பொருளீட்டச் சென்ற தலைவனைப் பிரிய மனமில்லாமல்

கவலையுற்ற தலைவி தலைவன் செல்லும் வழியில் உள்ள ஆபத்தினைக் கூறுமிடத்து மழவர்கள் மக்களைக் கொல்வதையும் ஆநிரைகளைக்கொள்ளையிடுவதும் அவர்கள் எவ்வளவு கொடுமையானவர்களென்றும் கூறும் பாடல்கள் பல. மழவர்கள் கையில் வில்லும் அம்பும் வைத்திருப்பர். அவர்கள் குறி வைக்கும் அம்பு தவறினால் தங்கள் கைவிரலை வாயில் வைத்துக் கடித்துக் கொள்வரென்றும் அகம்-215ஆம் பாடல் கூறுகிறது. மழவர் அஞ்சாத குணம் கொண்டவர். அம்பு விடுதலில் கூர்மை கொண்டவர். வழிச்செல்வோரைக் கொன்று பிணங்களைக் குவிப்பர்.அக்குவியலைக் கண்டால் அச்சம் உண்டாகும்.அதன் மீது கூர்மையான முனையைக் கொண்ட சிவந்த வாயை உடைய ஆண் பருந்துகள் அமர்ந்து பிணத்தின் தலையைத் தோண்டி எடுக்கும்.வலிமையான கால் விரல்களால் கண்களைத் நோண்டிக் கொண்டு சென்று கூட்டில் வாழும் தன் பேடைகளுக்கு ஊட்டும். பாலை நிலத்தின் தன்மையைக் மழவர்கள் வழியாகவும் அவர்களின் வாழ்வியல் வழியாகவும் புலப்படுகிறது.

## மழவர்-மறவர் வேறுபாடு

மழவர் என்பதில் உள்ள ழகரம் றகரமாகத் திரிந்து மறவர் என்றாகியது மறவர், மழவர் என்பதன் போலி என்பது உறுதிப்படும் போது பூசலில் ஈடுபட்ட இரு திறத்தாறும் மழவர் என்று கருதலாம் என்று **தொல்குடி வேளிர் வேந்தர்** எனும் நூலில் ர.பூங்குன்றன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். எழினியின் மறவர்கள் நிறைக்கவர்ந்தனரென்று அகம் - 105ஆம் பாடல் குறிக்கிறது.

**சில்பரிக் குதிரைப் பல்வே லெழினி**
**கெடலருந் துப்பின் விடுதொழில் முடிமார்**
**கனையெரி நடந்த கல்காய் காலத்து**
**வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்**
**தேம்பிழி நறுங்கள் மகிழின் முனை கடந்து.**
(அகம்-105;10-15)

மழவர் என்ற சொல்லில் இருந்து மறவர் எனும் சொல் உருவானது என்பதை ஒருசிலர் கூறினாலும் மொழியலாளர்கள் அதனை மறுத்து அவ்வாறு திரிய வாய்ப் பில்லை என்கின்றனர். மேலும் மறவர்கள் நிரை மீட்டதாகப் பாடல்கள் உள்ளன. மழவர்கள் நிரைக் கவர்தலிலும் மறவர்கள் நிரை மீட்டவரென்றும் இலக்கியங்கள் குறிக்கின்றன.

## ஆய்வு முடிவு

கொங்கு தேசத்திலும் சேர தேசத்திலும் பாலை நிலத்தில் வாழ்ந்ததாக குறிக்கப் பட்டுள்ள மறவர்கள் அதியமான் ,ஓரி போன்ற குறுநில மன்னர்கள் ஏவலின் படி போர்க்காலத்தில் பகைமன்னுடைய நாட்டில் புகுந்து ஆநிரைகளைக்கவர்ந்து வந்துள்ளனர். குறிப்பாக நாட்டின் செல்வமென்று கருதப் படும் பசுக்களைக் கவர்ந்து வந்துள்ளனர். பின் இவர்கள் பாலை நிலத்தில் பதுங்கி வாழ்க்கை நடத்தியுள்ளனர். தலைவனைப் பிரிந்து செல்ல மனமில்லாது அவனின் பொருளீட்டச் செல்லும் பயணத்தைத் தடுக்க, தலைவி பல இன்னல்கள் வழியில் நேருமென்று அவனின் பயணத்தைத்தடுக்க பாலை நிலத்தையும் அதன் தன்மையையும் அதில் வாழும் மறவர்களின் கொடுமை களையும் கூறி தானும் அச்சம் கொண்டு தலைவனையும் அச்சத்துக்குள்ளாக்குவன வாகவே அகப்பொருளில் அமைந்த பாடல் கள் குறிக்கின்றன.ஆனால் புறப்பாடல்கள் அவர்கள் வீரர்கள் என்று குறிக்கின்றன. மழவர் எனும் பெயரை அடைமொழியாக்கி மன்னர்கள் பகழப்பட்டதால் மழவர்கள் வீரர்களாகவே இருப்பர்.அந்த வீரர்களுள் வயது முதிர்ந்தவர்கள் போரில் ஈடுபடாமல் பாலை நிலத்தில் வாழ்வியலை மேற் கொண்டுள்ளனர்.

## பார்வை நூல்கள்

1. **ர. பூங்குன்றன்,** வேளிர்வரலாறு தடாகம் பதிப்பகம்,2021,சென்னை-41
2. **நடன.காசிநாதன்,** சேரர்-மழவர் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம் 2023,சென்னை-104
3. **அகநானூறு,** கலாஷேத்ரா பதிப்பகம் - சென்னை-600041
4. **ர.பூங்குன்றன்,** தொல்குடி வேளிர் வேந்தர், NCBH -14
5. **உ.வே.சா** – புறநானூறு, பாரி நிலையம் - 01